திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, பாடப் புத்தகங்கள் வழங்க எவ்வளவு விண்ணப்பங்கள் வந்தன என்று அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, 408 பேருக்கு பாடப் புத்தகங்கள் வழங்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

Madhavaram Milk Project

* 233. *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister **for Religious** Endowments be pleased to state—

(*a*) whether milch and dry cows were auctioned in **Madhavaram** Milk Project during 1970–71 and 1971–72; and

(*b*) if so, the details thereof?

மாதவரம் பால் பண்ணை

திரு. எஸ். எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாதவரம் பால் பண்ணையில் கறவை மாடுகளும் பால் வற்றிய மாடுகளும் 1970–71, 1971–72-ல் ஏலத்திற்கு விடப் பட்டனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) ஏலம் விடப்பட்ட பசுக்களின் எண்ணிக்கை, ஏட்டு மதிப்பு, கிடைத்த தொகை ஆகியவை பின்வருமாறு:—

ஆண்டு.	பசுக்களின் எண்ணிக்கை			ஏட்டு மதிப்பு ரூ.	கிடைத்த தொகை. ரூ.
	கறவைப் பசு.	பால்வற்றிய பசு.	மொத்தம்.		
1970–71	41	91	132	76,030	43,990
1971–72	64	35	99	78,600	46,195

1972 ஆகஸ்ட் 23]

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, கறவைப் பசுக்கள் ஏலத்தில் விடப்பட்டதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆண்டொன்றுக்கு 1,500 லிட்டர் பால் தராவிட்டால், ஏலத்திற்கு விடப்படுகிறது.

THIRU S. NARAYANASWAMY : I want to know from the Hon. Minister if there is any proposal to improve the quality of milk vended through kiosks in which the toned milk is being mixed? Is there any chance of getting better milk in the coming months?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், பால் விற்பனையை அதிகப்படுத்த வேண்டுமென்று இப்போது டெய்ரி கார்ப்பொரேஷன் அமைக்கப் பட்டு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறோம். "டோண்டு மில்க்" குறைந்த விலையில் வழங்கப்படுகிறது. ஏழைகள் வாங்கு கிறார்கள். டோன்டு மில்க் என்று சொல்லியே விற்று வருகிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : சென்னையில் இந்திய பால் வழங்கும் கழகத்தின் மூலமாக நவீன டெய்ரி ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அப்படிப் பட்ட திட்டம் அரசின் ஆலோசனையில் இருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, மக்கள் தொகை அதிகமாகி வருகிறதே, அதற்கேற்றமாதிரி பால் பண்ணைகளை விரிவுபடுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அரசின் ஆலோசனையில் இருக்கிறது.

உடுக்குறியிடப்படாத வினுக்கள்

Clash between the employees of the Madras Electricity System and the employees of the State Transport Department.

1. *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM and THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that there was a clash between the employees of the Electricity Board and the employees of the State Transport Department on 19th August 1971 at Adayar, Madras;